# திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்

## அவசர கூட்ட அறிவிப்பு

**10.09.2018ம் தேதி திங்கட் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்—**

**முன்னிலை : திருமதி. எஸ். பாரிஜாதம், பி.பார்ம்., எம்.பி.ஏ., அவர்கள்**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், திருவண்ணாமலை நகராட்சி.**

**பொருட்கள்**

**குறள் : —**
**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**தீர்மானம்**

**1.** அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018ல் சொத்து வரி பொது சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.மேற்கண்ட அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் கீழ்கண்டுள்ளவாறு சொத்து வரி உயர்வு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

மேலும், திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள் / சாலைகள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரித்து அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதனடிப்படையில் சொத்து வரி சீராய்வு செய்யவும் மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி, திருவண்ணாமலை நகராட்சி பகுதிகளிலுள்ள 455 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், A, B மற்றும் C ஆகிய மூன்று மண்டலங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் உள்ள கட்டிடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு கீழ்கண்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள அடிப்படை மதிப்பு (1 சதுர அடி) | உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அடிப்படை மதிப்பு (1 சதுர அடி) |
|---|---|---|---|---|
| 1 | A | 296 | 2.00 | 3.30 |
| 2 | B | 143 | 1.50 | 2.50 |
| 3 | C | 16 | 1.00 | 1.60 |

அரசாணை எண்.73 மற்றும் 76, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01.04.2018ம் தேதி முதல் திருவண்ணாமலை நகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து கட்டிடங்கள் பொது சொத்து வரி சீராய்வு செய்திடவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி பகுதியிலுள்ள சாலைகள்/ தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மணடலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் அடிப்படை மதிப்பு (Zone Value) நிர்ணயம் செய்யவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலீன் படி 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்திட அனுமதிக்கலாம்.
2. திருவண்ணாமலை நகராட்சியில் உள்ள 455 சாலைகள் / தெருக்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. அ) மண்டலம் A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரு.2.00/- லிருந்து ரு.3.30/- ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   ஆ) மண்டலம் B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரு.1.50/- லிருந்து ரு. 2.50/- ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   இ) மண்டலம் C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரு.1.00/- லிருந்து ரு. 1.60/- ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்டவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு உயர்வு செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பின்படி சொத்து வரி நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3786 /2018/அ2)**

**தீர்மானம்**

**2.** இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் **39** வார்டுகளுக்கும் கொசு புழு இல்லா இல்லம் என்ற வகையில், மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் கூட்ட அறிவுரையின்படி, டெங்கு காய்ச்சல், வராமல் தடுப்பு நடவடிக்கைக்காக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் கொசு புழு இல்லா இல்லம் என்ற Smile Sticker அச்சடிக்க ரூ.**55000/–** க்கு கீழ் வரும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **1** | நியூ சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>நெ.**52**, தேரடி வீதி, திருவண்ணாமலை | **:** | ரூ. **55000/–** |
| **2.** | உமா ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>நெ.**2** உண்ணாமலையம்மன் நிலையம், | **:** | ரூ. **57500/–** |
| **3.** | ஸ்ரீ சரவணா பிரிண்டர்ஸ்,<br>**23**, உண்ணாமலையம்மன் நிலையம், | **:** | ரூ. **59000/–** |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வரிசை எண்.**1**ல் நியூசக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், நெ.**52**, தேரடிவீதி, திருவண்ணாமலை அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். **2962 / 2018 /** எச்**1**

**தீர்மானம்**

**3.**திருவண்ணாமலை நகராட்சி 01.04.1896 முதல் நகராட்சியாக செயல்பட்டு வந்தது. பின் 21.12.2008 சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. 146.026 கி.மீ. பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் 39 வார்டுகள் அமைந்துள்ளன. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 145278 ஆகும்.

இந்நகராட்சியில் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் உள்ளதால் இந்நகரம் சுற்றுலாத்தலமாக நிகழ்கிறது. மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று சுமார் 5.00 லட்சம் பக்தர்கள் இந்நகருக்கு வருகை புரிந்து கிரிவலம் வந்து அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரரின் அருள் பெற்று செல்கின்றனர். இது போன்ற கார்த்திகை தீபத்திருவிழாவின் போதும் சுமார் 20.00 லட்சம் பேர் இந்நகருக்கு வருகை புரிகின்றனர். மேலும், சாதாரண நாட்களில் சராசரியாக 50000 பேர் வந்து செல்ல கூடிய இடமாக உள்ளது.

இந்நகராட்சியின் பிளாக் எண்.12, வார்டு எண்.2, நகர சர்வே எண். 620 ஆகியவற்றில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 1652.49 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இப்பகுதியில் நகராட்சி அலுவலகம் இயங்கி வருகிறது. தற்போது திருக்கோவிலூர் சாலையில் புதியதாக நகராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி முடிவுற்று திறப்பு விழா செய்யும் நிலையில் உள்ளது. புதிய நகராட்சி அலுவலகக் கட்டிடத்திற்கு இடம் பெயர்வு செய்த பின், பிளாக் எண்.12, வார்டு எண்.2, நகர சர்வே எண். 620 இந்த இடத்தினை புதியதாக கல்யாண மண்டபம் கட்டினால் நகராட்சிக்கு நிரந்தர வருவாய் தரத்தக்க இனமாக அமையும். மேலும் மேற்படி இடமானது நகரின் மையப்பகுதியாக அமைவதாலும் அருள்மிகு அருணாச்சலேஸ்வர் கோயிலுக்கு மிக அருகாமையில் உள்ளதால் திருமண மண்டபம் கட்டும் பணி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் நகராட்சிக்கு அதிக வருவாய் தரத்தக்கதாகவும் அமையும். இத்திருமண மண்டபமும் கட்டும் பணிக்கு ரூ.**640.00** இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தொகை நகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்ய முடியாத நிலை உள்ளதால் இத்திருமண மண்டபமும் கட்டும் பணியை தனியார் பங்களிப்பின் மூலம் DBFOT முறையில் மேற்கொள்ளவும் இப்பணிக்கான நிர்வாக அனுமதி பெறவும் வெளிச் சந்தையில் ஒப்பந்தப்புள்ளி கோரவும். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு அமைக்கவும், மேலும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.3378/2018/இ1)**

**தீர்மானம்**

**4.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN25B0042க்கு ஆயில் சர்விஸ் செய்ய துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளபடியால் விலைப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஜவஹர் ஆட்டோ சர்வீஸ்<br>77B மத்தலாங்குளத் தெரு, திருவண்ணாமலை | ரூ. 73892/- |
| 2. | கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்கஸ்<br>18 முத்து விநாயகர் கோவில் தெரு,<br>திருவண்ணாமலை | ரூ. 74685/- |
| 3. | திருமலை வெங்கடேஸ்வரா ஒர்க்ஷாப்<br>கீழ்நாச்சிப்பட்டு, திண்டிவனம் ரோடு<br>திருவண்ணாமலை | ரூ. 74860/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி, வரிசை எண்.1ல் ஜவஹர் ஆட்டோ ஒர்க்கஸ், 77B மத்தலாங்குளத் தெரு, திருவண்ணாமலை அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் முன் அனுமதி பெற்று பணி முடித்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 3924/ 2018 / எச்1**

**தீர்மானம்**

**5.** இந்நகராட்சியில் கணனி உதவி திட்டமிடுநராக பணிபுரியும் திரு.ஜி.முருகன் அவர்கள் இரு சக்கர வாகனம் வாங்க முன்பணம் ரூ.75000/- கோரியுள்ளார் இவருக்கு அரசாணை எண். 467 நிதித்துறை நாள் 22.09.2009ன்படி இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந..களண்.4054/2018/பி5**

**தீர்மானம்**

**6.** திருவண்ணாமலை நகராட்சியின் எல்லைக்குட்பட்ட, MIG 432/71, தாமரை நகரில் வசிக்கும், தமிழ்நாடு வீட்டு வசதி சங்கத்தின் தலைவர் திரு.எ.சுந்தரமூர்த்தி

என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.No. 23734/2015 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதாட திரு.R.கோவிந்தசாமி, சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்களை நியமிக்கவும், வழக்கின் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியில் ஈடு செய்யலாம்
3. மன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி எடுத்த நடவடிக்கையை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5160 / 2015 / எப்1**

**தீர்மானம்**

**7.** இந்நகராட்சி உலாகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நகராட்சி பகுதியில் உள்ள நீரேற்று நிலையங்களில் குடிநீர் பச்சை நிரமாக வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டதால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏதுவாக கூடுதலாக பிளிச்சிங் பவுடர் வாங்கி கொள்ள தோராய செலவினம் ரூ.1.13 லட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

ந.க.எண். 2679/2018/இ1

**தீர்மானம்**

**8.** இந்நகராட்சியின் உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்திற்கு 2.50 டன் பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்யும் 22.06.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு. ராமு<br>நெ. 129/43, ஐய்யங்குளத் தெரு<br>திருவண்ணாமலை | 1.13 | 0.13 % குறைவு |
| 2 | திரு.கே.ராஜா<br>நெ.9, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு, திருவண்ணாமலை | | 2.37 % அதிகம் |
| 3 | திருமதி. எம். துர்கா<br>நெ.42, திருமஞ்சன கோபுரத் தெரு<br>திருவண்ணாமலை | | 3.42 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு –**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ராமு, திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**தீர்மானம்**

**9.** இந்நகராட்சி வார்டு எண். 01 முதல் 39 வரை உள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிகளை நண்பர்கள் ஆடவர் குழு 10 நபர்கள் கொண்டு பணிகள் மேறகொள்ளவும் மேலும் தெருவிளக்கு பராமரிக்க தேவையான மின்சாதன பொருட்கள் கூட்டுறவு நிறுவனத்திடம் வாங்கிக் கொள்ளவும் மார்ச் – 2018 முதல் ஆகஸ்ட் – 2018 வரை ரூ.22,93,395/– செலவிட நகரமன்ற தீர்மான எண். 750 நாள் 30.04.2018ல் அனுமதிக்கப்பட்டது. தற்போது ஆறுமாதம் கடநது விட்டதால் மேலும் செப்டம்பர் –2018 முதல் பிப்ரவரி–2019 வரை 6 மாதத்திற்கு மேற்படி பணிகள் மேற்கொள்ளவும் தற்போது தெருவிளக்குகள் பகல் நேரங்களில் எரிவதாக புகார்கள் வருவதால் உரிய நேரத்தில் ON/OFF செய்ய கூடுதலாக 1 நபர்களை சேர்த்துக் கொள்ளவும் ஆடவர் குழு நபர்கள் 11 நபர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் மின் சாதன பொருட்களை கூட்டுறவு நிறுவனத்திடம் நேரடியாக வாங்கிக் கொள்ளவும் ஆகும் தோராய செலவினம் ரூ.23,47,096/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ஆடவர்குழு நபர்களின் செலவினம்**

| வ.எண் | பணி விபரம் | ஆட்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு கூலி | 1 மாதத்திற்கு ஊதியம் | 6 மாதத்திற்கு ஆகும் ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் | 2 | 425 | 25500 | 153000 |
| 2. | Head Mazdoor | 9 | 334 | 90180 | 541000 |
| | மொத்தம் | 11 | | மொத்தம் | 694000 |
| | | | | தெருவிளக்கு மின்சாதன பொருட்கள் | 1653096 |
| | | | | பெரு மொத்தம் | 2347096 |

**அலுவலகக் குறிப்பு –**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**10.** இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள TN25AH 8123 ஈப்பு வாகனத்துக்கு ஆண்டு காப்பீட்டு காலம் 26.09.2018ம் தேதியோடு முடிவுடைவதால் ஆண்டு காப்பீட்டு தொகை ரூ. 14256/– ஐ செலுத்த கோரி The New India Assurance Company Ltd., நிறுவனத்திடமிருந்து கேட்பு வறப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்திற்கு காப்பீட்டு தொகை செலுத்த மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | வண்டி எண் | காலம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | TN25AH 8123 | 27.09.2018 முதல் 26.09.2019 | ரூ. 14256/– |

**அலுவலகக் குறிப்பு –**

1. அனுமதி வழங்கலாம்
2. இச்செலவினம் வருவாய் நிதியின் கீழ்செலவிடலாம்

3. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**11. இந்**நகராட்சி பெண்கள் மேனிலைப்பள்ளி வளாகத்திலுள்ள திறந்த வெளி கிணற்றினை தூர்வாரி இதர பழுதுகளை சரி செய்யும் பணிக்கு **20.09.2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | Hi-Tech Tronics<br>மாம்பலம்,<br>சென்னை – 33 | 1.30 | 0.09 % குறைவு |
| 2 | திருமதி.இ.இளவரசி<br>15, பேகோபுரத் தெரு<br>திருவண்ணாமலை | | 1.25 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள Hi-Tech Tronics, சென்னை–33 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றப் பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**12.** இந்நகராட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2017–18** ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள **06.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.36ல் வேல் நகர் மற்றும் அல்லா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 24.90 | TSR Builders | 0.06% குறைவு |
| | | | Arunachala Construction | 0.45% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள TSR Builders, திருவண்ணாமலை என்பவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**13.** இந்நகராட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2017–18** ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள **06.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.36ல் கோபி நகருக்கு தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 24.90 | TSR Builders | 0.05% குறைவு |
| | | | Arunachala Construction | 0.55% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள TSR Builders, திருவண்ணாமலை என்பவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**14.** இந்நகராட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2017–18** ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள **06.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.36ல் பாரதிதாசன் குறுக்கு தெருவில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 20.20 | TSR Builders | 0.08% குறைவு |
| | | | Arunachala Construction | 0.60% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள TSR Builders, திருவண்ணாமலை என்பவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**15.** இந்நகராட்சியில் வார்டு எண். **01** முதல் **39** வரை உள்ள பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்கள் மற்றும் திறந்தவெளி கிணறு மின் மோட்டார்கள் மொத்தம் **202** உள்ளது. இவற்றின் மூலம் பொது மக்கள் அன்றாட அடிப்படை தேவைகளை பூர்த்தி

செய்கினற்னர். மேலும் நகராட்சி பொது கழிவறைகளிடல் உள்ள மின் மோட்டார்களின் மூலம் அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறது. இவ்வாறு பணிகள் மேற்கொள்ளும் மின் மோட்டார்கள் பழுதுகள் ஏற்படும் நிலையில் போர்க்கால அடிப்படையில் மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்ய **2018–19**ம் நிதி ஆண்டுகளுக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.**600000/–** க்கு (ரூபாய் ஆறு லட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்

ந.க.எண். **4501/2018/இ1**

**தீர்மானம்**

**16.** இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN25 AQ 6801 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து வழங்கிட தோராய செலவு ரூ.15000/- (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) ஆகும் என குறிப்பு வழங்கியுளள்தால் கீழ்கக்ண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஜவஹர் ஆட்டோ சர்வீஸ்<br>77B மத்தலாங்குளத் தெரு, திருவண்ணாமலை | ரூ. 15000/- |
| 2. | கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்கஸ்<br>18 முத்து விநாயகர் கோவில் தெரு,<br>திருவண்ணாமலை | ரூ. 15100/- |
| 3. | திருமலை வெங்கடேஸ்வரா ஒர்க்ஷாப்<br>கீழ்நாச்சிப்பட்டு, திண்டிவனம் ரோடு<br>திருவண்ணாமலை | ரூ. 16000/- |

வரிசை எண்.1ல், ஜவஹர் ஆட்டோ ஒர்க்கஸ், 77B, மத்தலாங்குளத்தெரு, திருவண்ணாமலை அவர்கள் குறைந்த விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேல் நடவடிக்கை எடுத்ததையும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1637/ 2018 / எச்1

**தீர்மானம்**

**17.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூார் **– 12** அவர்களின் ந.க.எண். **2059 / 2017/** பி**1** நாள் **31.08.2018**ந் தேதிய கடிதத்தின்படி ESCO – II டெண்டரின்படி தெருவிளக்கு LED விளக்குகளாக மாற்றி அமைக்க கள ஆய்வு செய்து Project Report தயார் செய்து ஒப்படைப்பு செய்தமைக்கு M/s. Active Energy OPC Private Limited சென்னை நிறுவனத்திற்கு நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ.**2,81,523/–** ஐ செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. இதன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலுர் அவர்களுக்கு ரூ.**2,81,523/–** (ரூபாய்

இரண்டு லட்சத்து எண்பத்து ஓராயிரத்து ஐநூற்று இருபத்து மூன்று)ஐ வரைவோலையாக செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**18.**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள **04.04.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.35 தர்கா தெருவிற்கு சிமெண்ட் சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 25.00 | ASR Construction | 0.08% குறைவு |
| | | | Arunachala Construction | 0.45% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணியில் வ.எண்.1ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ASR Construction, திருவண்ணாமலை என்பவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**19.** இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 39 வார்டுகளிலும் பொது சுகாதார நலன் கருதியும் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும், தற்காலிக பணியாளர்களை கொண்டு டெங்கு சிக்கன் குனியா நோய் ஒழிப்பு கணக்கீட்டு படிவம் 20000 எண்ணிக்கை அச்சிட்டு தருமாறு கோரியுள்ளார். அதன் அடிப்படையில் அதற்கு ஆகும் தோராய செலவு ரூ.45000/– க்கு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| 1 | நியூ சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், நெ.52, தேரடி வீதி, திருவண்ணாமலை | : | ரூ. 45000/– |
| 2. | உமா ஆப்செட் பிரிண்டர்ஸ், நெ.2 உண்ணாமலையம்மன் நிலையம், திருவண்ணாமலை | : | ரூ.48500/– |
| 3. | ஸ்ரீ சரவணா பிரிண்டர்ஸ், 23, உண்ணாமலையம்மன் நிலையம், திருவண்ணாமலை | : | ரூ. 47500/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. குறைந்த விலைப்புள்ளி கொடுத்த வரிசை எண்.1ல் நியூ சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று அவருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2962 / 2018 / எச்1

**நகராட்சி அலுவலகம்**
**நாள் – 10. 09. 2018**

**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்**
**திருவண்ணாமலை நகராட்சி.**